DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.46/2019**

அ.சா.4

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | வீரையா | Caste: | |
| Father's Name: | பெருமாள் | Calling: | |
| Village: | மூலவயல் | Religion: | |
| Taluk: | ஆர்.எஸ்.மங்கலம் | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 06.08.2024.

(எதிரி ஆஜர் .)

**முதன்மை விசாரணை**

நான் மூலவயல் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் ஆடு மேய்க்கிறேன். செல்வகுமார், தமயந்தி, குப்பமுத்து ஆகியோரை தெரியும் . ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. டிஎஸ்பி என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

இவ்வழக்கு சம்பந்தமாக 30.06.2019 அன்று திருவாடனை டிஎஸ்பி என்னை விசாரித்தார் என்றும், 28.06.2019 அன்று" மாலை சுமார் 5.40 மணியளவில் எனது வீட்டிற்கு முன்பு உள்ள பஸ்ஸ்டாப்பில் செல்வகுமார் ,வீரமுத்து, குப்பு, குப்பமுத்து ஆகியோர் உட்கார்ந்து

பேசிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியும் மூலவயல் காலனியைச் சேர்ந்த அழகர் என்பவரும் குடிபோதையில் வந்து அழகர் என்பவர் வீரமுத்துவை பார்த்து  நீயென்ன பெரிய ஆளா உன் இஷ்டத்திற்கு இடத்தை விற்று செலவு பன்ற என்று வீண் வம்பு செய்து கொண்டிருந்தார் என்றும்., ஆஜர் எதிரி குடிபோதையில் என்னை பார்த்து நீ இனிமேல் என் ஏரியா பக்கம் உன் செம்மறி ஆடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிட்டு வந்து தண்ணீக்கு காட்டுனினா செம்மறி ஆட்டின் தோளையும் உன் தோளையும் உறிச்சிடுவேன் என்று மிரட்டினார் என்றும் டிஎஸ்பி விசாரித்த போது சொன்னேன் என்றும் தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை.

Sd/- S.Uthamaraj
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)